முக்கிய வார்த்தைகள்:
*வணக்க வழிபாடு*
*மரணம்*
*செயல்கள்*
*இறை பக்தி*

**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**
**வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்**
**26 டிசம்பர் 2025 / 05 ரஜப் ஹிஜ்ரி 1447**

**மரணத்தை நினைவில் கொண்டு, வாழ்வது**

الحَمْدُ لِلّٰهِ الَّذِي خَلَقَ الإِنْسَانَ فِي أَحْسَنِ تَقْوِيمٍ، وَأَمَرَنَا بِالتَّقْوَى وَالخُلُقِ الكَرِيمِ، وَأَشْهَدُ أَنْ لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. اَللّٰهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَصَحْبِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ اللّٰهِ، اتَّقُوا اللّٰهَ حَقَّ تُقَاتِهِ، وَلَا تَمُوتُنَّ إِلَّا وَأَنْتُمْ مُسْلِمُونَ.

**ஜும்ரதல் முஃமினீன் ரஹிமகுமுல்லாஹ் [ஓரிறை நம்பிக்கை யாளர்களின் சமுதாயமே அல்லாஹ் உங்களுக்கு அருள் புரிவானாக!]**
அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் மீதான நமது **தக்வா** [பக்தியை] அதிகரித்துக் கொள்வோமாக! அல்லாஹ்வின் அனைத்து கட்டளைகளை நிறைவேற்றி, அல்லாஹ் தடைசெய்துள்ள அனைத்து விஷயங்களிலிருந்து தவிர்ந்து கொள்வோமாக. நன்மையை ஏவி, தீமையைத் தடுப்போமாக. நமது அனைத்து செயல்களிலும் நேர்மையாக நடந்து கொள்வோமாக. தேவைப்பட்டவர்களுக்கு உதவி செய்து, அல்லாஹ்விடம் அவனது திருப்தியை வேண்டிக் கொள்வோமாக. பணிவு எனும் ஆடையால் நம்மை நாம் அலங்கரித்துக் கொள்வோமாக. அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, இவ்வுலக வாழ்க்கையில் நமக்கு சிறப்பான முடிவை வழங்குவானாக. ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**அன்பிற்குரிய சகோதரர்களே!**

ஒவ்வொரு "குத்பா" பிரசங்கத்திலும் அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவை நினைவில் கொண்டு, அவன் மீது **"தக்வா"** [பக்தியை] ஏற்படுத்திக் கொள்ளுமாறு தொடர்ந்து நினைவூட்டப்படுகிறது. அடிக்கடி ஓதப்படும் திருக்குர்ஆன் வசனங்களில் ஒன்று, பின்வரும் வசனம் ஆகும். அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, திருக்குர்ஆனின் "ஆலி-இம்ரான்" எனும் அத்தியாயத்தின் 102-வது வசனத்தில் கூறுகிறான்:

يَـٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُوا۟ ٱتَّقُوا۟ ٱللَّهَ حَقَّ تُقَاتِهِۦ وَلَا تَمُوتُنَّ إِلَّا وَأَنتُم مُّسْلِمُونَ ١٠٢

பொருள்: ஓரிறை நம்பிக்கை கொண்டோரே! நீங்கள் அல்லாஹ்வை அஞ்ச வேண்டிய முறைப்படி அஞ்சுங்கள்; [அல்லாஹ்வை எப்படி நினைவில் கொள்ள வேண்டுமோ அவ்வாறு நினைவில் கொள்ளுங்கள்]. மேலும், [அல்லாஹ்வுக்கு முற்றிலும் வழிபட்ட முஸ்லிம்களாக அன்றி நீங்கள் மரணிக்காதீர்கள்.

தற்போது ஓதப்பட்ட வசனத்தின் நினைவூட்டுதலை நாம் ஒவ்வொரு வாரமும் கேட்டு வருகிறோம்; எனினும், இதன் பொருளை நாம் உண்மையாகவே அறிந்துள்ளோமா? அல்லாஹ்வை எவ்வாறு நினைவில் கொள்ள வேண்டுமோ அவ்வாறு நினைவில் கொள்கிறோமா? எப்போதாவது ஒரு நேரத்தில் நாம் அல்லாஹ்வின் பக்கம் திரும்ப வேண்டும் என நமக்கு அழைப்பு கொடுக்கப்பட்டால், நாம் நேர்மையானவர்களாகவும், சிறந்தவர்களாகவும், அல்லாஹ்வின் மீது பக்தியுள்ளவர்களாகவும், அல்லாஹ்வுக்கு அடிபணிந்த முஸ்லிம்களாகவும் மரணிக்க முடியும் என்பதில் திடமான நம்பிக்கை நமக்கு உள்ளதா? என நம்மை நாம் கேட்டுக் கொண்டோமா?

**அன்பிற்குரிய ஜமாஅத்தார்களே!**

நமது கவனத்தைத் திசை திருப்பும் விஷயங்களால் நிரப்பமான ஒரு உலகில் நாம் வாழ்ந்து வருகிறோம். நமது கவனத்தைத் திசை திருப்பும்

அவ்விஷயங்கள், சர்வதேச முன்னேற்றங்கள், டிஜிட்டல் சாதனங்கள், வேலைகள், அன்றாடக் கடமைகள் போன்ற பல வடிவங்களில் நமக்கு ஏற்படலாம். நாம் கவனக்குறைவாக இருந்தால், கவனச் சிதறல்கள் எனும் கடலால் நாம் அடித்துச் செல்லப்படலாம்; அவ்வாறு நடைபெற்றால், அல்லாஹ்வை **வணங்கி வழிபட** வேண்டுமென்ற நமது வாழ்க்கையின் அடிப்படைச் சிந்தனையை நாம் இழந்து விடுவோம்.

நாம் நமது வாழ்வாதாரத்தைத் தேடுவதற்காக ஓய்வில்லாமல் உழைத்து வருகிறோம்; இந்நிலையில், அனைவருக்கும் வாழ்வாதாரத்தை வழங்கும் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்த நாம் மறந்திருக்கலாம். நமக்கு மிகவும் முக்கியமான விஷயங்களாக உள்ள நமது குடும்பத்தார்கள், நமது செல்வம், நமது நலம் ஆகியவற்றைப் பாதுகாப்பதற்காக கடுமையாக உழைத்து வருகிறோம்; இந்நிலையில், அனைவருக்கும் பாதுகாப்பை வழங்கும் அல்லாஹ்விடம் பாதுகாப்பைத் தேடுவதற்கு நாம் மறந்திருக்கலாம்.

அல்லாஹ் நமக்கு வழங்கியுள்ள எண்ணற்ற அருட்கொடைகள் நம்மால் சம்பாதிக்கப்பட்டவை, நமக்குச் சொந்தமானவை என நாம் நினைத்திருக்கலாம்; அல்லாஹ் தான், அவற்றை நமக்கு வழங்கியுள்ளான்; அவன் எப்போது விரும்புகிறானோ அப்போது நம்மிடமிருந்து அவற்றை எடுத்துக் கொள்வான் எனும் உண்மையை நாம் அறியாதவர்களாக இருக்கலாம். பல **நற்காரியங்களை** நிறைவேற்றுவதற்கு இன்னும் நமக்கு அதிகமான நேரங்கள் உள்ளன எனும் நினைப்பில், அவற்றை நிறைவேற்றுவதைத் தள்ளிப் போட்டிருக்கலாம். நமது பாவங்களை நினைத்து வருந்துவதற்கு இன்னும் நமக்கு அதிகமான நேரங்கள் உள்ளன எனும் நினைப்பில், அவற்றை நினைத்து நாம் வருந்தாமலும் அவற்றிலிருந்து தவிர்ந்து கொள்ளாமலும் நாம் இருக்கலாம்.

**அன்பிற்குரிய எனது சகோதரர்களே**!

உண்மையில், நாம் இப்பூமியில் இன்னும் எத்தனை காலங்கள் வாழ இருக்கின்றோம் என்பதை அறியாதவர்களாக இருக்கின்றோம். **மரணம்** என்பது நிச்சயமான விஷயமாகும்; நாம் எதிர்பார்க்காத நேரத்தில் அது

நமக்கு ஏற்பட வாய்ப்புள்ளது. இளைஞர்கள், வயதானவர்கள், நலமானவர்கள், நோயாளிகள், வசதியானவர்கள், ஏழைகள் எனும் பாகுபாடின்றி அனைவருக்கும் **மரணம்** ஏற்படும். மக்களிடம் பரிபூரணமான ஈமான் எனும் ஓரிறை நம்பிக்கையும் அல்லாஹ்வின் மீதான பக்தியும் ஏற்படட்டும்; அதற்குப் பின்பு அவர்களைப் பிடித்துக் கொள்ளலாம் என **மரணம்** எதிர்பார்த்துக் கொண்டிருக்காது. நமது நேரம் ஏற்கனவே நிச்சயிக்கப்பட்டு விட்டது; முன் கூட்டியே தீர்மானிக்கப்பட்ட நேரத்தில் **மரணம்** நம்மை அடைந்தே தீரும்.

எனவே, நாம் தொடர்ந்து அல்லாஹ்வை **வணங்கி, வழிபடுவதன்** மூலமாகவும், **நற்காரியங்களைச்** செய்வதன் மூலமாகவும் ஒவ்வொரு நாளும் **மரணத்தைப்** பற்றிய விழிப்புணர்வோடும் அதற்கானத் தயாரிப்புடனும் இருப்பது அவசியமாகும்.

**அன்பிற்குரிய சகோதரர்களே**!
அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, திருக்குர்ஆனின் "அல்-முல்க்" எனும் அத்தியாயத்தின் 2-வது வசனத்தில் கூறுகிறான்:

ٱلَّذِى خَلَقَ ٱلْمَوْتَ وَٱلْحَيَوٰةَ لِيَبْلُوَكُمْ أَيُّكُمْ أَحْسَنُ عَمَلًا ۚ وَهُوَ ٱلْعَزِيزُ ٱلْغَفُورُ ﴿٢﴾

பொருள்: உங்களில் எவர் **செயல்களால்** மிகவும் சிறந்தவர் என்பதைச் சோதிப்பதற்காக, அவன் [அல்லாஹ்] **மரணத்தையும்** வாழ்வையும் ஏற்படுத்துகிறான்; மேலும், அவன் [யாவரையும்] மிகைத்தவன்; மிக மன்னிப்பவன்.

நம்மில் **நற்காரியங்களுடன்** அல்லாஹ்வைச் சந்திப்பவர் யார் எனச் சோதித்துப் பார்ப்பதற்காக, இத்தற்காலிகமான உலக வாழ்க்கையைச் சோதனையாக அல்லாஹ் நமக்கு வழங்கியுள்ளான். எவர் செல்வம், பதவிகள் அல்லது புகழுடன் அல்லாஹ்வைச் சந்திக்க வருகிறார் எனப்

பார்ப்பதற்காக அல்ல. மாறாக, **நற்காரியங்களுடன்** வருபவர்களை மட்டும் தான், அல்லாஹ் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றான்.

சகோதரர்களே நினைவில் கொள்ளுங்கள்! நமது நாட்கள் வரையறுக்கப் பட்டுள்ளன; நாம் நாளைக்கு சிறந்த முஸ்லிம்களாக ஆகலாம் என எதிர்பார்த்துக் கொண்டிருக்கலாம்; ஆனால் நாளைய தினம் நமக்கு வராமலாகி விடலாம். நமது மரணத்தின் நேரம் எப்போது வரும் என்பதையும், நமது **செயல்களின் புத்தகம்** எப்போது மூடப்படும் என்பதையும் நாம் அறியாதவர்களாக இருக்கின்றோம். ஆனால், ஒருநாள் மரணம் நமக்கு நிச்சயம் நிகழும் என்பதையும், நமது **செயல்களின் புத்தகம்** மூடப்படும் என்பதையும் நாம் நிச்சயமாக அறிந்துள்ளோம்.

இறைத்தூதர்[ஸல்] அவர்களின் தோழர்களில் ஒருவரான இப்னு உமர் [ரலி] அவர்கள் கூறுகையில்: *"நீங்கள் மாலை நேரத்தை அடைந்து விட்டால் அடுத்த நாள் காலை நேரத்தை எதிர்பார்க்க வேண்டாம். நீங்கள் காலைப் பொழுதை அடைந்து விட்டால் மாலைப் பொழுதை எதிர்பார்க்க வேண்டாம்"* [ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் புகாரி ரஹ்]

எனவே, எனது சகோதரர்களே! நம்மை நாம் முன்னேற்றிக் கொள்வதற்காக நாளையோ, நாளை மறுநாளையோ அல்லது புதிய ஆண்டையோ எதிர்பார்த்துக் கொண்டிருக்க வேண்டாம். இன்றிலிருந்தே ஆரம்பியுங்கள். நேற்றைய தினத்தை விட, இன்று நாம் சிறந்த முஸ்லிம்களாக ஆக வேண்டுமென ஒவ்வொரு நாளும் முயற்சி செய்யுங்கள். அல்லாஹ்வுடனான நமது உறவை முன்னேற்றிக் கொள்வதற்கும், நமது **வணக்க, வழிபாட்டுச்** செயல்களை பலப்படுத்திக் கொள்வதற்கும், நமது உள்ளங்களைப் பரிசுத்தமாக்குவதற்கும், **நற்காரியங்கள்** எழுதப்படும் நமது புத்தகத்தை நிரப்பிக் கொள்வதற்கும் ஒவ்வொரு நாளும் அரிய வாய்ப்புகளாக உள்ளன.

அல்லாஹ்வை நினைத்து வணக்க வழிபாடுகளில் ஈடுபடுவதற்காகவும், நற்காரியங்களைச் செய்வதற்காகவும் நாம் செலவிடும் ஒவ்வொரு நொடிப்

பொழுதும் நம்மை அல்லாஹ்வின் பக்கம் நெருக்கமாக ஆக்கி வைக்கும். விலைமதிக்க முடியாத நேரங்களை வீணாக்காதீர்கள்; காரணம் **மரணம்** நமக்கு எப்போது நிகழும் என்பதை நாம் அறியமாட்டோம். மரணம் நமக்கு நிகழும் போது, நாம் அல்லாஹ்வுக்கு அடிபணிந்தவர்களாகவும் பணிவானவர்களாகவும் நேர்மையானவர்களாகவும் இருப்பதை உறுதி செய்து கொள்ளுங்கள்.

**அன்பிற்குரிய எனது சகோதரர்களே!**

ஒருமுறை, இறைத்தூதர்[ஸல்] அவர்கள்: "அல்லாஹ் ஒரு அடியாருக்கு நன்மையை நாடினால், அவரைச் செயல்படுமாறுச் செய்வான் எனக் கூறினார்கள். அப்போது, அல்லாஹ்வின் தூதரே! அல்லாஹ் அவரை எப்படிச் செயல்படுமாறுச் செய்வான்? எனத் தோழர்கள் கேட்டார்கள்; **மரணத்துக்கு** முன்பாக **நற்காரியங்களைச்** செய்யுமாறு அவருக்கு வழிகாட்டுவான்" என இறைத்தூதர்[ஸல்] அவர்கள் பதிலளித்தார்கள். [ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் திர்மிதி ரஹ்]

எனவே, நற்காரியங்களைச் செய்வதற்கான ஆர்வம் இன்னும் நம்மிடம் ஏற்படவில்லையெனில், அது அல்லாஹ்வுடனான நமது உறவில் பலஹீனம் உள்ளது என்பதற்கான அடையாளமாக இருக்கலாம். அந்நிலையில், நாம் நமது வணக்க வழிபாடுகளைப் பற்றிச் சிந்திப்பதற்கும், நமது வாழ்வின் முக்கிய நோக்கமாக உள்ள இறை வணக்கத்தின் பால் நம்மை மீண்டும் தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதற்கும் நாம் முயற்சிக்க வேண்டும்.

ஆண்டின் இறுதி காலத்தை ஒவ்வொருவரும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் நிலையில், ஒரு முஸ்லிம் நற்காரியங்களை அதிகரித்துக் கொள்வதற்கு ஒவ்வொரு நாளையும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். குறிப்பாக, ரஜப் மாதம் வந்து விட்டது; இம்மாதம் அல்லாஹ்வினால் மதிக்கப்பட்ட, புனிதமிக்க மாதங்களில் ஒன்றாகும். நம்மைப் பொருத்த வரை, இது நமது ஆன்மீகத்தையும், இறை பக்தியையும் அதிகரித்துக் கொள்வதற்கானப் பருவகாலமாக உள்ளது. இது நீண்ட காலமாக எதிர்பார்க்கப்பட்டதாகும்.

தொடர்ந்து நற்காரியங்களைச் செய்வதற்கும், அல்லாஹ்வின் திருப்தியை நாடுவதற்கும் முயற்சி செய்யும் அடியார்களில் ஒருவராக அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா நம்மை ஆக்குவானாக! அல்லாஹ்வை எப்படி அஞ்ச வேண்டுமோ அவ்வாறு அஞ்சுகின்ற அடியார்களில் ஒருவராகவும் நம்மை ஆக்குவானாக! நமக்குச் சிறந்த முடிவை வழங்கி, அருள் புரிவானாக! உண்மையான, சிறந்த, பக்திமிக்க, அடிபணிந்த முஸ்லிம்களாக அவனிடம் திரும்புவதற்கான வாய்ப்பையும் நமக்கு வழங்குவானாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ العَظِيْمَ لِي وَلَكُمْ، فَاسْتَغْفِرُوهُ إِنَّهُ هُوَ الغَفُوْرُ الرَّحِيْم.**

## இரண்டாவது பிரசங்கம்

الحَمْدُ للهِ حَمْدًا كَثِيرًا كَمَا أَمَرَ، وَأَشْهَدُ أَن لَا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ الله، اِتَّقُوا اللهَ تَعَالَى فِيمَا أَمَرَ، وَانتَهُوا عَمَّا نَهَاكُم عَنْهُ وَزَجَرَ.

أَلَا صَلُّوا وَسَلِّمُوا عَلَى النَّبِيِّ الْمُصْطَفَى، فَقَدْ أَمَرَنَا اللهُ بِذَلِكَ حَيْثُ قَال فِي كِتَابِهِ العَزِيزِ: إِنَّ اللهَ وَمَلَائِكَتَهُ يُصَلُّونَ عَلَى النَّبِيِّ يَا أَيُّهَا الَّذِينَ ءَامَنُوا صَلُّوا عَلَيهِ وَسَلِّمُوا تَسْلِيمًا. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ وَبَارِكْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِ سَيِّدِنَا مُحَمَّدٍ.

وَارْضَ اللَّهُمَّ عَنِ الخُلَفَاءِ الرَّاشِدِينَ المَهْدِيِّينَ سَادَاتِنَا أَبِي بَكْرٍ وَعُمَرَ وَعُثْمَانَ وَعَلِيٍّ، وَعَن بَقِيَّةِ الصَّحَابَةِ وَالقَرَابَةِ وَالتَّابِعِينَ، وَتَابِعِي التَّابِعِينَ، وَعَنَّا مَعَهُم وَفِيهِم بِرَحْمَتِكَ يَا أَرْحَمَ الرَّاحِمِينَ.

اللَّهُمَّ اغْفِرْ لِلمُؤْمِنِينَ وَالمُؤْمِنَاتِ، وَالمُسْلِمِينَ وَالمُسْلِمَاتِ، الأَحْيَاءِ مِنْهُم وَالأَمْوَاتِ. اللَّهُمَّ ادْفَعْ عَنَّا البَلَاءَ وَالوَبَاءَ وَالزَّلَازِلَ وَالمِحَنَ، مَا ظَهَرَ مِنْهَا وَمَا بَطَنَ، عَن بَلَدِنَا خَاصَّةً، وَسَائِرِ البُلْدَانِ عَامَّةً، يَا رَبَّ العَالَمِينَ. اللَّهُمَّ انْصُرْ إِخْوَانَنَا المُسْتَضْعَفِينَ فِي غَزَّةَ وَفِي فِلَسْطِينَ وَفِي كُلِّ مَكَانٍ عَامَّةً، يَا أَرْحَمَ الرَّاحِمِينَ. اللَّهُمَّ بَدِّلْ خَوْفَهُمْ أَمْنًا، وَحُزْنَهُمْ فَرَحًا، وَهَمَّهُمْ

فَرَجًا، يَا رَبَّ العَالَمِينَ. اَللَّهُمَّ اكْتُبِ السِّلْمَ وَالسَّلاَمَ وَالأَمْنَ وَالأَمانَ لِلْعَالَمِ كُلِّهِ وَلِلنَّاسِ أَجْمَعِينَ. رَبَّنا آتِنَا فِي الدُّنيا حَسَنَةً، وَفِي الآخِرَةِ حَسَنَةً، وَقِنا عَذَابَ النَّارِ.

عِبَادَ اللهِ، إِنَّ اللهَ يَأْمُرُ بِالعَدْلِ وَالإِحْسَانِ وَإِيتَاءِ ذِي الْقُرْبَى، وَيَنْهَى عَنِ الفَحْشَاءِ وَالمُنكرِ وَالبَغْيِ، يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُونَ، فَاذْكُرُوا اللهَ العَظِيمَ يَذْكُرْكُمْ، وَاشْكُرُوهُ عَلَى نِعَمِهِ يَزِدْكُمْ، وَاسْأَلُوهُ مِن فَضْلِهِ يُعْطِكُم، وَلَذِكْرُ اللهِ أَكْبَرُ، وَاللهُ يَعْلَمُ مَا تَصْنَعُونَ.